## பெற்றோர் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?

“பள்ளிகளுக்கான ஜெர்மானிய மொழி” திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரு குழந்தை மொழி வகுப்பில் கலந்து கொண்டால், பெற்றோர் செலுத்த வேண்டிய கட்டணம் ஒரு குழந்தைக்கு ஒரு செமஸ்டருக்கு Fr.300.

## குழந்தை வளர்ப்பு என்றால் என்ன?

“பள்ளிகளுக்கான ஜெர்மானிய மொழி” திட்டத்தில் பங்கு பெறும் குழந்தைகளின் பெற்றோர்கள், 2023/2024 கல்வி ஆண்டில் எட்டு பெற்றோர் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டும். இந்த திட்டத்தின் நோக்கம், பெற்றோர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளை மழலையர் பள்ளிக் கல்விக்கு தயார்படுத்துவது குழந்தை வளர்ப்பு திறன்கள் மேம்படுத்தப்படுகிறது மற்றும் குழந்தை வீட்டில் விளையாட்டு மற்றும் ஆராய்ந்து தெரிந்துகொள்வதன் மூலம் கற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறது மழலையர் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் இணைந்து செயல்படுகிறார்கள் மற்றும் மழலையர் பள்ளிக்கு செல்வதற்கு முன்பே குழந்தைகளுக்கு நம்பிக்கை அளிக்கிறார்கள் ஜெர்மானிய மொழி தெரியாத, வேலைக்கு செல்லும் பேற்றோர்கள் கூட புரிந்துகொள்ளும் வகையில் பெற்றோர் பயிற்சி வகுப்பு வடிவமைக்கப்பட்டிருக்கிறது பெற்றோர் பயிற்சி வகுப்பு இலவசமாக வழங்கப்படுகிறது மற்றும் அந்த நேரத்தில் குழந்தைகள் கவனித்துக்கொள்ளப்படுவார்கள்.

**திட்ட நிர்வாகி** «பள்ளிகளுக்கான ஜெர்மானிய மொழி»:

**சபரினா லீப்**

Schulweg 8
7430 Thusis
079 428 79 32
deutschschule@schule-thusis.ch

d

GEMEINDE
**THUSIS**

# பள்ளிகளுக்கான ஜெர்மானிய மொழி

## மழலையர் பள்ளிக் கல்விக்கு முன்னர் இரண்டு வருடம் ஜெர்மானிய மொழி கற்றுக்கொள்ளுங்கள்

---

## பெற்றோருக்கான தகவல்

பிப்ரவரி 2022

5 வயதில் ஒரு குழந்தை மழலையர் பள்ளியில் கல்வி பயில ஆரம்பிக்கும்போது, அந்த குழந்தையால் ஜெர்மானிய மொழி பேச முடிய வேண்டும். குழந்தைகளுக்கு ஜெர்மானிய மொழி பரிச்சயம் இல்லை என்றால், அவர்களுக்காக துசிஸ் நகராட்சி ஆரம்பகட்ட மொழி கற்றுக்கொள்ளும் வகுப்புகளை நடத்துகிறது. மழலையர் பள்ளியில் கல்வி பயில ஆரம்பிக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, காசிஸில் உள்ள செயின்ட் கேத்தரினா பள்ளியில் ஒரு செமஸ்டர் காலகட்டத்தில் 15 வாரங்கள், வாரத்தில் ஒரு நாள் குழந்தைகளுக்கு மொழி கற்றுத்தரப்படும். பெற்றோர்கள் அவர்களுக்காக நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டும் மற்றும் இந்த இரண்டு வருடங்கள் குழைந்தைகளுக்கு உதவ வேண்டும்.

**மழலையர் பள்ளியில் கல்வி பயில ஆரம்பிக்கும் முன் ஏன் ஜெர்மானிய மொழி கற்க வேண்டும்?**

மழலையர் பள்ளியில் சிறப்பாகக் கல்வி கற்பதற்கு ஜெர்மானிய மொழி மிகவும் அவசியம். மழலையர் பள்ளியில் கல்வி பயில ஆரம்பிக்கும்போது கொஞ்சம் அல்லது முழுமையாக ஜெர்மன் மொழி பேசத் தெரியாத குழந்தைகள், பள்ளியில் ஜெர்மானிய மொழி பேசும் தோழர்களை விடப் படங்களைக் கற்றுக்கொள்வதற்குச் சிரமப்படுவார்கள். பள்ளியில் செயல்திறன் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறது. அதனால் அவர்கள் மழலையர் பள்ளியில் கல்வி பயில ஆரம்பிக்கும் முன் ஜெர்மானிய மொழியைக் கற்றுக்கொள்வது முக்கியம்.

மழலையர் பள்ளியில் கல்வி பயில ஆரம்பிக்கும்போது பல குழந்தைகளுக்கு ஜெர்மன் மொழியில் போதிய அறிவு இல்லை என்பதை துசிஸ் பள்ளி கடந்த காலங்களில் கண்டறிந்தது. எனவே இந்த குழந்தைகளுக்குச் சிறப்பு ஆதரவை வழங்கும் வாய்ப்பை துசிஸ் நகராட்சி உருவாக்கியுள்ளது துசிஸ் முனிசிபல் கவுன்சில் 2018 நவம்பர், 19 ஆம் தேதி நடைப்பெற்ற கூட்டத்தில் "பள்ளிகளுக்கான ஜெர்மானிய மொழி" திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது, மேலும் 2019 டிசம்பர், 16 ஆம் தேதி நடைப்பெற்ற கூட்டத்தில் அதை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்தது.

**சிறு வயதுக் குழந்தைகள் ஜெர்மானிய மொழியை எவ்வாறு கற்றுக்கொள்வார்கள்?**

சிறு வயதுக் குழந்தைகள் அன்றாட சூழ்நிலைகளில் மற்றும் தோழர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மொழிகளைக் கற்றுக்கொள்கிறார்கள். செயின்ட் கேத்தரினா பள்ளியின் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஓர் குறிக்கோள் மற்றும் விளையாட்டு முறையில் மொழியைக் கற்றுக்கொள்ள உதவுகிறார்கள்.

இந்த திட்டத்தில் கலந்துகொள்வதன் மூலம் ஜெர்மானிய மொழியைத் தவிர வேறு பலவற்றையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. இந்த வகுப்புகளில், சிறுவர்கள் ஒன்றாக விளையாடுகிறார்கள், குழுவாக இணைந்து செயல்படுகிறார்கள், அவர்களின் ஆளுமைத் திறனை வளர்த்துக்கொள்கிறார்கள் மற்றும் சுயமாகச் செயல்படத் தொடங்குகிறார்கள். குழந்தைகளுக்கான விரிவான ஆதரவிற்கு மதிப்பு வழங்கப்படுகிறது.

**ஒரு குழந்தை போதிய அளவிற்கு ஜெர்மானிய மொழியைப் பேசுகிறாரா இல்லையா என்று எப்படித் தெரிந்துகொள்வது?**

பாசல் பல்கலைக்கழகத்தில் இருக்கும் வல்லுநர்கள், விஞ்ஞானரீதியாக ஓர் கேள்வித்தாளை வடிவமைத்துள்ளார்கள். அதன் அடிப்படையில் ஜெர்மானிய மொழி பேச தெரியாத பெற்றோர்கள் கூட, அவர்களின் குழைந்தையின் ஜெர்மானிய மொழி புலமையை துல்லியமாக கணிக்க முடியும். இந்த கேள்வித்தாள் பல மொழிகளில் கிடைக்கிறது. மழலையர் பள்ளியில் சேருவதற்கு இரண்டரை ஆண்டுகள் வயது குறைவாக இருக்கும் அனைத்து குழந்தைகளின் பெற்றோருக்கும் ஜனவரி மாதம் நடைபெறும் தகவல் நிகழ்வில் இது வழங்கப்படும் மற்றும் அவர்களுடன் இணைந்து அது பூர்த்திசெய்யப்படும். நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாத பெற்றோர்களுக்குக் கேள்வித்தாள் அஞ்சல் வழியாக அனுப்பப்படும்.

பாசல் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் அந்த கேள்வித்தாள்கள் மதிப்பிடப்படும். மார்ச் மாதத்தில், முடிவு மற்றும் அடுத்த கட்ட செயல்முறை குறித்துத் திட்ட நிர்வாகத்தால் பெற்றோருக்கு எழுத்துபூர்வமாகத் தெரிவிக்கப்படும். மழலையர் பள்ளியில் சேர்வதற்கான போதிய அளவு ஜெர்மானிய மொழி அறிவாற்றல் உங்கள் குழந்தைக்கு இல்லை என்று தெரிய வந்தால், ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் “பள்ளிகளுக்கான ஜெர்மானிய மொழி” திட்டத்தில் கலந்துகொள்ள பரிந்துரைக்கப்படும்.

**பரிந்துரை கிடைக்கப்பெற்றவுடன் – அடுத்து என்ன செய்ய வேண்டும்?**

ஜெர்மானிய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒரு குழந்தைக்கு பரிந்துரை வழங்கப்பட்டால், அதன்பிறகு அந்தக் குழந்தையின் பெற்றோர்கள் எழுத்துபூர்வமாக இந்த திட்டத்திற்கு பதிவுச் செய்ய வேண்டும். “பள்ளிகளுக்கான ஜெர்மானிய மொழி” திட்ட நிர்வாகம் பெற்றோர்களுக்கு உதவுகிறது. கேள்வித்தாளின் மதிப்பீடு மற்றும் வல்லுநர்களின் மதிப்பீடு ஒத்துப்போகவில்லை என்றால், அந்த குழந்தைகள் இந்த திட்டத்தில் கலந்துகொள்ள தேவையில்லை.

**எனது குழந்தை எந்தனை நாட்களுக்கு ஒரு முறை இந்த வகுப்பில் கலந்துகொள்ள வேண்டும்?**

மழலையர் பள்ளியில் கல்வி பயில ஆரம்பிப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வாரத்திற்கு ஒரு நாள் விகிதத்தில் ஒரு செமஸ்டரில் 15 வாரங்கள் குழந்தைகள் ஜெர்மன் மொழியைக் கற்க வேண்டும் என்று இத்திட்டம் வலியுறுத்துகிறது. தவறாமல் வகுப்பிற்கு வர வேண்டும். துசிஸ் நகராட்சியின் பள்ளி விடுமுறைகள் பொருந்தும். குழந்தை தொடர்ந்து வகுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றால், அதைப்பற்றித் திட்ட நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்படும் என்பதைப் பெற்றோர் ஒப்புக்கொள்கிறார்கள்.